தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஒகேனக்கல்லில் நீர்வரத்து 28,000 கன அடியாக அதிகரிப்பு

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரியாற்றில் வெள்ளிக்கிழமை நீர்வரத்து அதிகரித்து நொடிக்கு 28,000 கன அடியாக உள்ளது. ஒகேனக்கல்லில் வியாழக்கிழமை 18,000 கன அடியாக இருந்த நீர்வரத்து வெள்ளிக்கிழமை அதிகரித்து 28,000 கன அடியாக உள்ளது. நீர்வரத்து அதிகரித்துள்ளதால் போலீஸார், தீயணைப்புத்துறையினர் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மாவட்ட நிர்வாகமும் நீர்வரத்தை தொடர்ந்து கண்காணித்து வருகின்றன.

**நீர்ப்பாசன செயல்பாடுகள்: பொதுப்பணித் துறை குழு ஆய்வு**
ஈரோடு மாவட்டத்தில் நீர்ப்பாசன செயல்பாடுகள் குறித்து பொதுப்பணித் துறையின் பொறியாளர்கள் குழு புதன்கிழமை பார்வையிட்டனர். தமிழக அரசின் பொதுப்பணித் துறை சார்பில் திருச்சி துவாக்குடியில் பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. இப் பயிற்சி நிலையத்தில் திருச்சி, சென்னை, நெல்லை, தருமபுரி, கோவை, ஈரோடு, தேனி, சிவகங்கை, மதுரை மாவட்டங்களில் பணியாற்றி வரும் நீர்வள ஆதார அமைப்பின் உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. கோவை, ஈரோடு, சேலம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் பாசனத் திட்டங்கள், வாய்க்கால் நீர் நிர்வாக முறைகள், அணைக்கட்டுகள், பாசன அமைப்புகள் செயல்படும் முறைகள் ஆகியவற்றை பொறியாளர்கள் குழு நேரில் பார்வையிட்டனர். பாசன மேலாண்மை பயிற்சி நிலைய செயற்பொறியாளர் நேரு தலைமையில் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்மின் நிலையம், கல்லாறு பழப்பண்ணை, பவானிசாகர் அணை, கொடிவேரி அணை ஆகியவற்றை பார்வையிட்டு அணை பற்றிய நீரியல் விவரங்களை சேகரித்து கொண்டனர். இதே போல, கீழ்பவானி பிரதான வாய்க்காலில் உள்ள அவசரகால நீர் போக்கி செயல்படும் முறைகள் குறித்து கோபி உதவி செயற்பொறியாளர் சதீஷ்குமார் பொறியாளர்களுக்கு விளக்கி கூறினார். மேலும், கவுந்தப்பாடி பாசன சபை அலுவலகத்தில் கீழ்பவானி

முறை நீர் பாசன சபைகள் இயங்கும் முறைகள் குறித்தும், கொப்பு வாய்க்கால் பராமரிப்பு பணிகள், அலுவலக செயல்பாடுகள், ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், நீர் நிர்வாகத்தில் பொதுப்பணித் துறையுடன் இணைந்து பாசன சபைகள் பங்கேற்கும் முறை, கிளை பாசன சபைகள் மூலமாக செய்யப்பட்ட பணிகள் குறித்தும் கீழ்பவானி முறை நீர் பாசன விவசாயிகள் கூட்டமைப்புத் தலைவர் காசியண்ணன், செயலாளர் வடிவேலு, துணைத் தலைவர் ராமசாமி, இணைச் செயலாளர் வெங்கடாசலபதி, பகிர்மான கமிட்டித் தலைவர் செங்கோட்டையன் ஆகியோர் பொறியாளர்களுக்கு விளக்கம் அளித்தனர். பொறியாளர்கள் குழு வறட்டுப்பள்ளம், காலிங்கராயன் அணைக்கட்டு பகுதிகளையும், மேட்டூர் அணையையும் நேரில் பார்வையிட்டனர்.

## 7.5 கி.மீ. தூரத்திற்கு ரூ.75 கோடியில் பேபி வாய்க்கால், கான்கிரீட் தடுப்புச் சுவர் கட்ட திட்டம்

காலிங்கராயன் கால்வாயில் 7.5 கி.மீ. தூரத்துக்கு ரூ.75 கோடி செலவில் பேபி வாய்க்கால், கான்கிரீட் தடுப்புச் சுவர் கட்ட பொதுப்பணித் துறை திட்டமிட்டுள்ளது. காலிங்கராயன்பாளையம் அணைக்கட்டு பகுதியில் இருந்து ஆவுடையார்பாறை வரை 800 ஆண்டுக்கு முன்பு வெட்டப்பட்ட காலிங்கராயன் வாய்க்காலின் வலதுகரையில் உள்ள சாய, சலவை மற்றும் தோல் ஆலை கழிவுநீர் மற்றும் சாக்கடை நீர் கலப்பதை தடுக்கும் வகையில், 3 ஆண்டுக்கு முன்பு பேபி வாய்க்கால் கட்டும் பணி மற்றும் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. முதல்கட்டமாக 3.5 வது மைலில் இருந்து 9.6 வது மைல் வரையிலும் ரூ.50 கோடி செலவில் கழிவுநீர் கலப்பதை தடுக்க தடுப்புச் சுவர் கட்டும் பணியும், சாய, தோல் மற்றும் சாக்கடை கழிவுநீரை சேகரித்து வெளியேற்றும் வகையில் பேபி வாய்க்கால் கட்டும் பணியும் செய்து முடிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக கடந்த ஆண்டு அணைக்கட்டில் இருந்து 3.4 வது மைல் வரையிலும் ரூ.40 கோடி செலவில் இதேபோல பேபி வாய்க்காலும், தடுப்புச் சுவர் மற்றும் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியும் நடந்து முடிந்தது.மூன்றாம் கட்டமாக தற்போது 9.7 வது மைலில் இருந்து 15 வது மைல் வரையிலும் சுமார் 7.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.75 கோடி செலவில் பேபி வாய்க்கால் மற்றும் தடுப்புச் சுவர் கட்டும் பணியை மேற்கொள்ள பொதுப்பணித் துறையினர் திட்டமிட்டுள்ளனர். இப்பணிக்கான திட்ட மதிப்பீடு தயாரித்து அரசின்

ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஆண்டு இறுதிக்குள் இதற்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, ஜனவரி மாதத்தில் இருந்து பணியைத் தொடங்க வாய்ப்புள்ளதாக பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியதாவது: காலிங்கராயன் கால்வாயில் சாய, தோல் மற்றும் சாக்கடை கழிவுநீர் கலப்பதால் பாசனம் செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வந்தனர். இப்பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமானால் வாய்க்காலின் வலதுகரையில் இயங்கி வரும் சாய, தோல் ஆலைகளில் இருந்து வெளியேற்றப்படும் சாய, தோல் கழிவுநீரையும், சாக்கடை நீரையும் தடுத்து நிறுத்தி பேபி வாய்க்கால் மூலம் பிச்சைக்காரன் பள்ளம் ஓடை, சுண்ணாம்பு ஓடை, பெரும்பள்ளம் ஓடை வழியாக வெளியேற்றுவது என முடிவு செய்யப்பட்டது. மேலும் சாய, தோல் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் வகையில் வாய்க்காலின் இரு கரையிலும் தடுப்புச் சுவரும், வலதுகரையில் ரோந்து வாகனங்கள் செல்லும் வகையில் வலதுகரையை அகலப்படுத்தவும் திட்டமிட்டு பணிகள் செய்யப்பட்டன. இதுவரை 2 கட்டமாக பணி நடந்து முடிந்துள்ளது. தற்போது காலிங்கராயன்பாளையத்தில் இருந்து ஈரோடு சிந்தன் நகர் வரையிலும் தடுப்புச் சுவரும், பேபி வாய்க்காலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பேபி வாய்க்கால் கட்டிய பிறகு காலிங்கராயன்பாளையம், ஆர்.என்.புதூர், மறவாபாளையம், சூரியம்பாளையம், பி.பெ.அக்ரஹாரம், அசோகபுரம், வைராபாளையம், சிந்தன் நகர் வரையிலும் வலதுகரையில் உள்ள சாய, தோல் ஆலைகளின் கழிவுநீர் காலிங்கராயன் வாய்க்காலில் கலப்பது பெரிதும் தடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 2 கட்டமாக பணி முடிவடைந்து விட்டதால் மூன்றாம் கட்ட பணிக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் அரசு நிதி ஒதுக்கீடு செய்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றனர்.

## "1.45 லட்சம் கால்நடைகளுக்கு செப். 21-க்குள் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படும்'

கரூர் மாவட்டத்தில் 1.45 லட்சம் கால்நடைகளுக்கு செப். 21-ம் தேதிக்குள் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படும் என்றார் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி. கரூர் அருகேயுள்ள சின்னதாராபுரம் ஊராட்சி புளியம்பட்டியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கோமாரி நோய்த் தடுப்பூசி முகாமை தொடக்கி வைத்து அவர் மேலும் பேசியது: கோமாரி நோய் என்பது கால்நடைகளை தாக்கி பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் ஒரு கொடிய

தொற்றுநோய். இந்நோயுற்ற கால்நடைகளில் கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு, குளம்புகளுக்கு இடையே புண்கள் காணப்படும். இந்நோயுற்ற கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம், உபயோகப்படுத்திய தண்ணீர், தீவனத்தொட்டிகள், தீவனம், காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்நோய் பரவுகின்றன. இந்த நோய்த் தாக்குதலால் கறவை கால்நடைகளின் பால் உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் சினைப்பிடிப்பது தடைபடும். பாதிக்கப்பட்ட மாடுகளின் பாலை இளம்கன்றுகள் குடிப்பதன் மூலம் அவை பாதிக்கப்பட்டு இறக்க நேரிடும். இந்த நோயைத் தடுக்க தற்போது 7-வது சுற்றாக மாவட்டத்தில் 1.87 லட்சம் தடுப்பூசிகள் வந்துள்ளன. இதனை கடந்த 1-ம் தேதி முதல் வருகிற 21-ம் தேதி வரை வழங்க வேண்டுமென மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டதுடன் அவரே கடந்த 1-ம் தேதி கோமாரி நோய் முகாமை தொடக்கி வைத்தார். இதையடுத்து 4-ம் தேதி வரை 41,500 கால்நடைகளுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1 லட்சத்து 45 ஆயிரத்து 500 தடுப்பூசிகள் மாடுகளுக்கு வழங்கும் பணி அனைத்து கிராமங்களிலும் நடைபெற்று வருகிறது என்றார். முன்னதாக, சின்னதாராபுரம் கால்நடை மருத்துவர் மோகன்ராஜ் வரவேற்றார். ஆவின் உதவி பொதுமேலாளர்கள் துரையரசன், வசந்தகுமார், விரிவாக்க அலுவலர் ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கால்நடை மருத்துவர் மோகன்ராஜ், ஆய்வாளர்கள் சக்திவேல், ஜானகி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>பயறு வகை தீவனப் பயிரை விவசாயிகள் இலவசமாக பெறலாம்</u>**

பயறு வகை தீவனப் பயிரை விவசாயிகள் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என்று வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையமும், அலமாதியில் இயங்கும் மண்டல தீவனப் பயிர் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் இணைந்து, பெரம்பலூர் மாவட்ட கால்நடை விவசாயிகள் மத்தியில் தீவனப் பயிர் உற்பத்தி மற்றும் அதன் பயன்களை பிரபலப்படுத்தும் முயற்சியாக நிகழாண்டு கலப்போகோனியம் எனும் பயறுவகை தீவனப் பயிர் விதைகளை 20 விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க உள்ளது. கலப்போகோனியம் எனும் பயறுவகை தீவனம் பல பயன்களை உடையது. இந்தப் பயிரை தென்னை, தேக்கு, பாக்கு தோப்புகளில் ஊடு பயிராக வளர்ப்பதன் மூலம்

50 சதவீத உரத் தேவையை குறைக்கலாம். மேலும், பயறுவகை தீவனப் பயிரில் 14-17 சதம் புரதச்சத்து உள்ளது. எனவே, இவற்றை ஆடு, மாடுகளுக்கு புல்வகைத் தீவனப் பயிருடன் சேர்த்து அளிப்பதன் மூலம் பால் மற்றும் மாமிச உற்பத்தியை அதிகரிக்கலாம். 20 நபர்களுக்கே இந்த விதையை இலவசமாக அளிக்க இயலும். எனவே, விருப்பமுள்ள விவசாயிகள் நேரில் சென்று முன்பதிவு செய்து கொள்ளவும். மேலும் விவரங்களுக்கு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை அணுகலாம்.

**<u>வேளாண் பணிகளில் காரைக்கால் விவசாயிகள் தீவிரம்</u>**

காரைக்கால் மாவட்டத்தில் நெல் விதைப்புப் பணிகளில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். காரைக்கால் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 5 ஆயிரம் ஹெக்டேரில் நெல் பயிர் செய்யப்பட்டு வருகிறது. நிகழாண்டும் இதே அளவில் விவசாயிகள் பயிரிட்டுள்ளதாக வேளாண் துறையினர் தெரிவிக்கின்றனர். காவிரித் தண்ணீர் கடைமடைப் பகுதியான காரைக்காலுக்கு கடந்த மாதம் 22-ம் தேதி வந்தது. இதைத்தொடர்ந்து அம்பகரத்தூர், நெடுங்காடு, திருநள்ளாறில் சில பகுதிகளில் விவசாயப் பணிகள் தொடங்கியுள்ளன. புதுவை மாநிலத்தில் காரைக்காலில் மட்டுமே காவிரித் தண்ணீரை நம்பி விவசாயம் செய்யப்படுகிறது. இந்த நிலையில், காவிரி தண்ணீரை பயன்படுத்தி கடந்த மாதம் விதைத்தல், உழவிடுதல், நாற்றங்கால் அமைத்தல் ஆகிய பணிகளை விவசாயிகள் மேற்கொண்டனர். தற்போது நெல் விதைப்பு பணிகளில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இதற்கிடையே, விவசாயிகளுக்கு வேளாண் துறை செய்துவரும் பணிகள் வேளாண் துறை அதிகாரி ஒருவர் வெள்ளிக்கிழமை கூறியது: காரைக்கால் மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்டேரில் விவசாயம் செய்யப்படுகிறது. 4 ஆயிரம் ஹெக்டேரில் பயிர் செய்யத் தேவையான விதைகள் ஒரு ஹெக்டேருக்கு 60 கிலோ வீதம் அந்தந்த உழவரகம் மூலம் பொது விவசாயிகளுக்கு கிலோ ரூ. 10 என்றும், தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு 75 சத மானியத்திலும் வழங்கப்பட்டு வருகிறது. யூரியா, பொட்டாஷ் போன்ற உரங்களும் போதுமான அளவு கையிருப்பில் உள்ளன. குறிப்பாக 150 நாள் பயிரான சாவித்திரி, காரைக்கால்-1 ஆகியவையும், 135 நாள் பயிரான ஏடிடி 38, 39, 46 மற்றும் பொன்னி ரகமும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தவிர, மழை காலத்தில் பாதிக்காத வகையில் ஏடிடி 45, 49 ரகங்களும் விதைத்துள்ளனர். ஒரு வார காலம்

தண்ணீரில் பயிர் மூழ்கினாலும் பாதிக்காத வகையான ஸ்வர்ணா சப் மற்றும் சி.ஆர். சப் ரகங்களும் விதைத்துள்ளனர். ஹெக்டேருக்கு 5 டன் வீதம் மகசூல் கிடைக்குமென நம்புகிறோம். எல்லா விவசாயிகளையும் வேளாண் அலுவலர்கள் சந்தித்து உரிய ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

**<u>அலங்கார மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் அமைக்க விண்ணப்பிக்கலாம்'</u>**

லங்கார மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் அமைக்க விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) அ. உதயகுமார் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக வீட்டின் பின் பகுதியில் காலியாக உள்ள இடத்தில் அலங்கார மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் அமைக்கலாம். தொழில் தொடங்க விருப்பம் உள்ள மகளிர் சுய உதவிக்குழு பெண்கள், மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் இத்தொழிலில் ஆர்வமுள்ளவர்கள் மீன்வளத் துறை மூலமாக மானியம் வழங்கும் திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். இத்திட்டத்தில் சேர சொந்தமாக வீடு இருக்க வேண்டும். வீட்டருகே தண்ணீர் வசதியுடன் 200முதல் 250 சதுர அடி காலியிடம் அல்லது வீட்டருகே தண்ணீர் வசதியுடன் 200முதல் 250 சதுர அடி இடத்துடன் கூடிய குறைந்த பட்சம் 7 ஆண்டுகள் குத்தகைக்கு பெறப்பட்ட இடமாகவும் இருக்கலாம். இத்தொழில் தொடங்க மூலதனம் ஒரு லட்சம் ரூபாய் என கணக்கிடப்பட்டு, அதில் பயனாளிகளுக்கு 50 சதவீதம் மானியமாக அதிகபட்சம் ரூ. 50 ஆயிரம் வழங்கப்படும். பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக்கும் பங்கு மீனவர்களின் மனைவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைய விரும்புவோர் மீன்வளத் துறை உதவி இயக்குநர் வடசேரியில் உள்ள அலுவலகத்தில் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பப் படிவம் பெற்று பூர்த்தி செய்து அனுப்புவதுடன் சொந்த வீடு மற்றும் நிலங்களுக்கான ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>மொத்த விலை சந்தைகளை கூடுதலாகத் திறப்பதற்கு தில்லி அரசு அனுமதி</u>**

தில்லி அரசின் வேளாண் விளைபொருள் விற்பனை குழுக்கள் (ஏபிஎம்சி) மூலம் வேளாண் விளைபொருள்கள் விற்பனை செய்யப்படுவது போல தலைநகரில் மொத்த விலைச் சந்தைகளைக் கூடுதலாக திறக்க தில்லி அரசு அனுமதி யளித்துள்ளது. இதுகுறித்து தில்லி தலைமைச் செயலாளர் டி.எம். ஸ்போலியா வெள்ளிக்கிழமை கூறியதாவது: "ஆசாத்பூர், கேசவ்பூர், ஷாதரா ஆகிய பகுதிகளில் தில்லி அரசின் வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்கள் (ஏபிஎம்சி)

செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், பழங்கள், காய்கறி உள்ளிட்டவற்றை ஏபிஎம்சியின் வரம்பில் இருந்து வைக்க முடிவு செய்யப்பட்டு, இது தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது' என்றார். தில்லி அரசின் வேளாண் விளைபொருள் விற்பனை குழுக்கள் (ஏபிஎம்சி) மூலம் விளைபொருளை விற்பனை செய்யும் விவசாயிகள் குழுக்களின் விதிகளுக்கு உள்பட வேண்டும். இந் நிலையில், இந்த விதி தளர்த்தப்பட்டு, ஏபிஎம்சி கட்டுப்பாட்டில் அல்லாத மொத்த விலை சந்தைகளைக் கூடுதலாக திறக்க அனுமதிருப்பது விவசாயிகள் தங்களது விளைபொருள்களை விற்க வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று கூறப்பட்டாலும், இதன் வெற்றியைப் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்கின்றனர் ஏபிஎம்சி உறுப்பினர்கள். இதுகுறித்து ஆசாத்பூர் ஏபிஎம்சி உறுப்பினர் ராஜேந்திர சர்மா கூறுகையில், "விவசாயிகள் தங்களது விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர். ஆனால், வேளாண் விளைபொருள் விற்பனை குழுக்கள் தவிர்த்து வேறெங்கெல்லாம் விளைபொருள் களை விற்க வேண்டும் என்பதையும், மாற்று கூடுதல் மொத்த விலை சந்தைகள் குறித்த விவரங்களையும் அரசு வெளியிட வேண்டும். தற்போதை நிலையில் அரசு அறிவித்துள்ள இத் திட்டம் விவசாயிகளுக்கு பலனளிக்காது' என்றார். ஆசாத்பூர் மண்டி காய்கறி வியாபாரி பால்தேவ் காபா கூறுகையில், "விவசாய விளைபொருள் களை சேமித்து வைக்க தேவையான கிடங்கு, போக்குவரத்து உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை முதலில் ஏற்படுத்த வேண்டும். இது போன்ற மண்டிகள் கடன் வழங்கும் முறையில் இயங்கி வருகின்றன. எங்களிடம் காய்கறிகளை கடன் பேரில்தான் வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்' என்றார். மற்றொரு மொத்த வியாபாரி லலித் கூறுகையில், "எங்களிடம் காய்கறிகளை விற்பனை செய்ய வரும் விவசாயிகளுக்கு விதைகள் வாங்க முன்கூட்டியே கடன் வழங்குகிறோம். அதே முறையை தற்போது அறிமுகப்படுத்தும் திட்டத்திலும் அரசு செயல்படுத்த வேண்டும்' என்றார். இந்த விவகாரம் குறித்து ஏபிஎம்சி உயர் அதிகாரி கூறுகையில், "விவசாயிகள் தங்களது விளைபொருள்களை நேரடியாக விற்பனை செய்யும் திட்டம் 2004-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்காக, சிறப்பு விவசாய மண்டிகள் "கிசான் ஹாட்' என்ற பெயரில் திறக்கப்பட்டன. ஆனால், இந்தத் திட்டம் 2008-ஆம் ஆண்டு கைவிடப்பட்டது. ஆசாத்பூர் எபிஎம்சிக்கு ரூ. 10 லட்சம் நஷ்டமும் ஏற்பட்டது' என்றார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வெள்ளோட்ட முறையில் சாகுபடி செய்யப்பட்ட உருளை கிழங்கு

ஊட்டி :ஊட்டியில், வெள்ளோட்ட முறையில் சாகுபடி செய்யப்பட்ட புதிய உருளைக் கிழங்கு ரகத்தின் அறுவடை நேற்று நடந்தது.மத்திய உருளை கிழங்கு ஆய்வு மையம், உருளைக் கிழங்கு ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. கிழங்கு பயிரை தாக்கும் நோய், அவற்றை தவிர்க்கும் முறை என, பலவித ஆய்வுகளில் ஈடுபட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, "கப்ரி கிரிதாரி' என்ற புதிய உருளைக் கிழங்கு விதையை வெள்ளோட்ட முறையில் சாகுபடி செய்து, அதை விவசாயிகளின் பயன்பாட்டுக்கு கொண்டு செல்லும் பொறுப்பை, "உபாசி' வேளாண் அறிவியல் நிலையத்திடம் வழங்கியது.அதன்படி, 2.2 டன் விதைகள், ஊட்டி ஸ்டேட் பாங்க் காலனி பகுதியில் உள்ள விவசாய நிலத்தில், ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் விதைக்கப்பட்டன; 4 மாத விளைச்சலுக்கு பின், நேற்று, அறுவடை செய்யப்பட்டது."உபாசி' வேளாண் அறிவியல் நிலைய தலைவர் டாக்டர் ராமமூர்த்தி, டாக்டர் சுகுணா ஆகியோர் கூறியதாவது:உருளைக் கிழங்கை தாக்கும், பின் கருகல் நோய், விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. உருளைக் கிழங்கை பொருத்தவரை அதிகளவு பூஞ்ஞான கொல்லி மருந்துகளை தெளிக்க வேண்டும். இந்நிலையில், கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் அறிமுகம் செய்யப்பட்ட, "கப்ரி கிரிதாரி' என்ற புதிய உருளைக் கிழங்கு விதை மூலம், கிழங்குகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. நான்கு மாத சாகுபடியில், பிற உருளைக் கிழங்கு பயிர்க்கு, 25 முறை பூஞ்சானக் கொல்லி மருந்து தெளிக்கப்பட்டது. ஆனால், "கப்ரி கிரிதாரி' ரக உருளைக் கிழங்குக்கு, வெறும் 6 முறை மட்டுமே மருந்து தெளிக்கப்பட்டது. தவிர, இந்த ரகம், பின் கருகல் நோயை தாக்குப்பிடிக்க கூடியது. தற்போது, அறுவடை செய்யப்பட்டுள்ள உருளைக் கிழங்கில், விதை கிழங்குகளை சேகரித்து, விவசாயிகளுக்கு வழங்கி, அவற்றின்

உற்பத்தியை அதிகரிக்க செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர்கள் கூறினர். இதில், உபாசி விஞ்ஞானி டாக்டர் சண்முகம், நீலகிரி மாவட்ட விற்பனை கூட்டுறவு சங்க தலைவர் கண்ணபிரான், நீலகிரி மாவட்ட உருளைக் கிழங்கு சாகுபடியாளர்கள் சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மத்திய உருளைக் கிழங்கு ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**<u>விதை ஆய்வு பணிகளை அதிகாரி திடீர் ஆய்வு</u>**

தர்மபுரி: கோவை விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று அதிகாரிகள், தர்மபுரி மாவட்டம் விதைச்சான்று, விதை ஆய்வு மற்றும் விதை பரிசோதனை பிரிவுகளின் பணிகளை ஆய்வு செய்ததுடன், விதை தரத்தினை உறுதி செய்திட அறிவுரை களை, ஊழியர்களுக்கு வழங்கினர். மேலும், உதவி விதை அலுவலர்கள் மற்றும் விதைச்சான்று அலுவலர்களுக்கு கொண்டை கடலை மற்றும் கொள்ளு பயிர்களில் அதிக அளவில் விதைப்பண்ணை அமைத்து, விதை உற்பத்தி செய்து, பயிறு வகை பயிர்களின் உற்பத்தியை பெருக்குவதுடன், பயிறு வகைகள் விதை உற்பத்திக்கு அரசு மானியம் வழங்குவதால், விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற வாய்ப்பு இருப்பதை சுட்டிக்காட்டிய அதிகாரிகள், விவசாயிகள் பயிறு வகை விதை உற்பத்தியில் ஈடுபட வேண்டுமென, கோரிக்கை விடுத்தனர். விதை ஆய்வு பிரிவினால், விதை உரிமம் வழங்கப்பட்டு, விதை விற்பனை மேற்கொள்ளும் தனியார் விதை விற்பனை நிலையங்களில், விதை சட்டத்தினை அமல்படுத்தி தரமான விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்திட விதை ஆய்வாளர்களுக்கு உத்தரவிட்டதுடன், தர்மபுரியில் உள்ள தனியார் விதை விற்பனை நிலையத்தில் நேரடியாக ஆய்வு செய்து, தரமான விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்தனர். அப்போது, தர்மபுரி விதைச்சான்று உதவி இயக்குனர் அசோகன் உடனிருந்தார்.

**<u>கி.கிரியில் பப்பாளி சா குபடி அதிகரிப்பு: நல்ல வரவேற்பால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த மகாராஜகடை சுற்றுவட்டார பகுதியில் சொட்டு நீர் பாசனம் மூலம், பப்பாளி சாகுபடி செய்வது அதிகரித்துள்ளது. வெளி மாநில மார்க்கெட்டில் நல்ல வரவேற்பு உள்ள நிலையில், பப்பாளி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சர்க்கரை நோய் மற்றும் வயிறு சம்பந்தமான நோய்களை குணப்படுத்தும் மருத்துவ குணம் உள்ள பப்பாளி பழத்துக்கு, பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கும். கிராம புறங்களில்

வீட்டுக்கு அருகில் மட்டும் வளர்க்கப்பட்டு வந்த நாட்டு பப்பாளி செடிகளில் இருந்து பறிக்கப்படும் காய்கள் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், நாளுக்கு நாள் பப்பாளி பழத்தின் தேவை அதிகம் உள்ள நிலையில், தற்போது வீரிய ஒட்டுரக பப்பாளி செடிகளை விவசாயிகள் தங்கள் நிலங்களில் சாகுபடி செய்ய துவங்கி உள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், குறிப்பாக, மகாராஜகடை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களில், சொட்டு நீர் பாசனம் மூலம் வீரிய ஒட்டுரக பப்பாளி செடிகளை சாகுபடி செய்துள்ளனர். ஒரு விதை, எட்டு ரூபாய்க்கு வாங்கும் விவசாயிகள், ஒரு ஏக்கரில் ஆயிரம் செடிகளை நட்டு வைத்து வளர்க்கின்றனர். ஆறு மாதத்துக்கு பின், அறுவடைக்கு வரும் பப்பாளி காய்களை, மொத்த வியாபாரிகள் மூலம் ஆந்திர மாநிலத்தில் உள்ள குளிர்பான கம்பெனிகள் மற்றும் சென்னை, கர்நாடகா மாநிலம் பெங்களூரு மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர். பப்பாளி சாகுபடியில், கூலி ஆட்கள் தேவை குறைவாக உள்ளது. மேலும், மற்ற பயிர்களை போலவே, பப்பாளியும் சொட்டுநீர் பாசனம் மூலம் சாகுபடி செய்யப்படுவதால், தண்ணீர் பிரச்சனை இல்லாமல் போகிறது. பொதுவாக, மாகாராஜகடை சுற்றுவட்டார பகுதியில், அனைத்து விவசாயிகளும் கிணற்று பாசனத்தை மட்டுமே நம்பியுள்ளனர். நெல், கரும்பு, வாழை, மஞ்சள் பயிர்களுக்கு, அதிக தண்ணீர் தேவைப்படும் நிலையில், பப்பாளி சாகுபடிக்கு குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படுவது, விவசாயிகளுக்கு சாதகமாக உள்ளது. இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது, பல விவசாயிகள் பப்பாளி சாகுபடிக்கு மாறியுள்ளனர். இதுகுறித்து, மகாராஜகடை அடுத்த மாட்டுவோனியை சேர்ந்த சேர்ந்த பப்பாளி சாகுபடி செய்துள்ள விவசாயி சரவணன் கூறியதாவது: கடந்த காலங்களில் கிணற்று பாசனம் மூலம் கரும்பு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்து வந்தோம். காட்டு விலங்குகள் அட்டகாசம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக, ஆண்டுக்கு ஆண்டு நஷ்டமே மிஞ்சியது. இதனால், கடந்த ஆண்டில் இருந்து, நான்கு ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் மூலம், 3,850 பப்பாளி செடிகளை வளர்த்து வருகிறோம். ஆறு மாதத்தில், ஒரு ஏக்கரில் வாரத்துக்கு, ஒரு முறை இரண்டு டன் பப்பாளி உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு கிலோ, நான்கு ரூபாய் என்ற அளவில் மொத்த விற்பனையாளகர்கள் தோட்டத்திலே வந்து காய்களை எடுத்து செல்கின்றனர். இதன் மூலம் வாரத்துக்கு, ஏக்கருக்கு, எட்டாயிரம் ரூபாய்

கிடைக்கிறது. செடிகளை பராமரிக்கும் முறை பொறுத்து, விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. கடந்த ஆண்டு மகாராஜகடை பகுதியில், 25 ஏக்கரில் மட்டும் பப்பாளி சாகுபடி செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்து வருவதால், எங்கள் பகுதியில் உள்ள பல விவசாயிகளுக்கும், தற்போது, பப்பாளி சாகுபடிக்கு மாறி உள்ளனர். இதன்படி, தற்போது மகாராஜகடை சுற்றுவட்டார பகுதியில் மட்டும், 250 ஏக்கருக்கு மேல் பப்பாளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது, என்றார்.

## இலவச கால்நடை சிகிச்சை முகாம்.

ஓசூர்: ஓசூர் பி.எம்.சி.,டெக் கல்லூரி சார்பில், இலவச கால்நடை சிகிச்சை முகாம் நடந்தது. ஓசூர் கோனேரிப்பள்ளியில் உள்ள, பி.எம்.சி.,டெக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை ஆகியவை சார்பில், பாகலூர் ஊராட்சிக்கு உட்பட்ட கூஸ்தானப்பள்ளி கிராமத்தில், இலவச கால்நடை சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. பெருமாள் மணிமேகலை கல்வி நிறுவனங்களின் தலைவர் இன்ஜினியர் பெருமாள் தலைமை வகித்தார். பி.எம்.சி.,டெக் கல்வி நிறுவனத்தின் அறங்காவலர் மலர், செயலாளர் குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். எலக்ட்ரானிக்ஸ் ரோபோடிக்ஸ் துறை பேராசிரியர் திருமுருகன் வரவேற்றார். பி.எம்.சி.,டெக் கல்லூரி சமூக சேவைத்துறை ஒருங்கிணைப்பாளர் சேதுராமன், அரசு கால்நடை பராமரிப்புத்துறை ஓசூர் கோட்ட உதவி இயக்குனர் ராஜேந்திரன் ஆகியோர் முகாமை துவக்கி வைத்தனர். பாகலூர் கால்நடை மருத்துவமனை உதவி டாக்டர் தயாநிதி, 889 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தார். முகாம் ஏற்பாடுகளை, பி.எம்.சி.,டெக் பாலிடெக்னிக் கல்லூரி இயந்திரவியல் டூல் அண்ட் டை மற்றும் எலெட்ரானிக்ஸ் ரோபோடிக்ஸ் மாணவர்கள் செய்திருந்தனர். இயந்திரவியல் டூல் அண்ட் டை துறை பேராசிரியர் பிரவின் நன்றி கூறினார்.

## மழைக்காலத்துக்காக மரக்கன்றுகள் தயார் கிராமம் மற்றும் பள்ளிகளில் நட முடிவு

ஈரோடு: மழைக்காலமான, அக்டோபர் முதல், ஜனவரி வரை, பல்வேறு கிராமங்கள் மற்றும் பள்ளிகளில், 50 ஆயிரம் மரக்கன்றுகள் நட, வனத்துறை முடிவு செய்துள்ளது. கடந்த, இரண்டு ஆண்டாக தமிழகத்தில் கடுமையான வறட்சிகள் நிலவி வருகிறது. அதனால், வனப்பகுதி மட்டுமல்லாது, கிராமத்தில் உள்ள பனை

மற்றும் தென்னை மரங்கள் கூட, பல இடங்களில் அழிந்து வந்தன. கோடை காலத்தில் பெய்த மழையாலும், வெப்ப சலனத்தால் பெய்த மழையாலும், கடும் வறட்சியில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக, மரங்கள் மீண்டு வந்துள்ளன. வரும், அக்டோபர் மாதத்தில், மழைக்காலங்களில், ஈரோடு மாவட்டத்தில் மட்டும், 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்ய, தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இவைகள் அனைத்தும், வனம் இல்லாமல் கிராமப்புற பகுதிகள், பள்ளிகள், சாலைகள், கல்லூரிகள், பொதுமக்கள் பயன்படும் வகையில் எங்கெல்லாம் மரக்கன்றுகள் நட முடியுமோ, அங்கெல்லாம் மரக்கன்றுகள் நட, வனத்துறை முடிவு செய்துள்ளது. அதற்காக, நர்சரியில் மரக்கன்றுகளை மொத்தமாக வாங்க, வனத்துறை முடிவு செய்துள்ளது. வரும் அக்டோபர் மாதமான மழைக்காலத்தில், இம்மரக்கன்றுகள் நடவு செய்தால், செழிப்புடன் மரக்கன்றுகள் வளரும். அதற்காக, 50 ஆயிரம் மரக்கன்றுகள் தயார் செய்து வருகிறோம், என வனத்துறை அதிகாரி ராஜ்குமார் தெரிவித்தார்.

## வரத்து குறைவால் பழங்கள் விலை உயர்வு

கரூர்: கரூர் பகுதியில், வரத்து குறைந்துள்ளதால், பழங்கள் விலை உயர்ந்துள்ளது. கரூர் மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால், வேளாண் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. கரூரை பொறுத்தவரை, பிற மாவட்டங்களில் இருந்து தான் பழங்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. விளைச்சல் குறைவானதால், பழங்களின் வரத்தும் குறைந்து விட்டது. கோடைகாலம் முடிந்த நிலையில், வெயில் வாட்டி வருகிறது. பலத்த காற்று வீசுவதால், வெயிலின் தாக்கம் தெரியவில்லை. கோடை முடிந்ததும், பழங்களின் விலை குறையும். ஆனால், இம்முறை வரத்து குறைந்ததால், பழங்களின் விலையும் அதிகரித்துள்ளது. விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, பழங்களின் விலை கிலோவுக்கு, 40 ரூபாய் வரை அதிகமானது. பின், விலை குறைந்து விட்டது. தற்போது, ஆப்பிள் கிலோ, 140க்கு விற்பனை

செய்யப்படுகிறது. ஆரஞ்சு, 100, சாத்துக்குடி, 100, திராட்சை, 100, மாதுளம், 100 என பழங்களின் விலை அதிகரித்துள்ளது. கோடைகாலம் முடிந்ததால் வாழைப்பழங்களின் விலையும் உயர்ந்துள்ளது. ஒரு டஷன் பூவன் பழம் (பழங்களை பொறுத்து), 50 முதல், 100 வரைக்கும், மோரீஸ் பழம், 10 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ரஸ்தாளி, பச்சநாடன் பழம் ஒன்று, 10 ரூபாய் வரை விலைபோகிறது. இதனால், கரூர் மாவட்ட மக்கள் பழங்கள் வாங்க முடியாமல் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

## <u>மாவட்டத்தில் நீர்வடிப்பகுதியில் தடுப்பணை கட்டுமான பணி</u>

ரம்பலூர்: மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மற்றும் நபார்டு நீர்ச்செறிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கட்டப்பட்டு வரும் தடுப்பணை பணிகளை, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ் அஹமது நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.
பெரம்பலூர் மாவட்டத்தில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மற்றும் நபார்டு நீர்ச்செறிவு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பண்ணைக்குட்டை, அமுக்கு குட்டை, மண்வரப்பு, கல்வரப்பு, தடுப்பணை அமைத்தல், வரத்துவாரி அமைத்தல், மரக்கன்றுகள் நடுதல், சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவி வழங்குதல் ஆகிய பணிகள் நடந்து வருகின்றன. ஆலத்தூர் வட்டம், நாட்டார்மங்கலம் கிராமத்தில், 90 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 13 மீட்டர் குறுக்களவில் தடுப்பணை அமைக்கப் படுகிறது. இந்த தடுப்பணையின் மூலம் அருகில் உள்ள குன்றுகளின் மீது பொழியும் மழைநீரானது தேக்கும் வகையில் கட்டப்படுகின்றது. இந்த அணை அமைக்கப்படுவதன் மூலமாக தடுப்பணையின் அருகில் உள்ள 11 பாசனக் கிணறுகளில், நீர்மட்டம் உயர்வதுடன், அந்த கிணறுகள் அமைந்துள்ள, 38 ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும். இந்த தடுப்பணை கட்டும்பணியினை கலெக்டர் தரேஷ்அஹமது பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளை விரைவாக முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

## <u>தாண்டிக்குடியில் தொடர் மழை</u>

தாண்டிக்குடி:தாண்டிக்குடியில் நேற்று கனமழை இடைவிடாது பெய்தது. கடந்த ஒரு வாரமாக தாண்டிக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மலைக்கிராமங்களில் தொடர் மழை பெய்து வருகிறது. நேற்று பகல் 2 மணிக்கு துவங்கிய மழை மாலை 4 மணி வரை கனமழையாக கொட்டித் தீர்த்தது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் மிதமான மழை பெய்து கொண்டிருந்தது. மாலை 4 மணி நிலவரப்படி 23 மி.மீ., மழை பதிவாகியது.

## 16 நாட்களில் பேச்சிப்பாறை அணை 18 அடி உயர்வு

நாகர்கோவில்: கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 16 நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வந்தது. இதனால் மாவட்டத்தில் உள்ள 1278 குளங்கள் நிரம்பியது. 354 குளங்கள் நிரம்பும் தருவாயில் உள்ளது. கடந்த 21-ம் தேதி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 9.50 அடியாகவும், பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 43.40 அடியாகவும் இருந்தது. கடந்த 16 நாட்கள் மழையில் பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 18 அரை அடி உயர்ந்து 27 .80 அடியாக உள்ளது. இதுபோல பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 43.40 அடியாக இருந்தது. தற்போது இது 70.35 அடியாக உள்ளது. தொடர் மழையால் கல்குளம் தாலுகாவில் 14 வீடுகளும், அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் 5 வீடுகளும், தோவாளை தாலுகாவில் 13 வீடுகளும், விளவங்கோடு தாலுகாவில் 4 வீடுகளும் சேதம் அடைந்துள்ளது.

## பூக்கள் வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சி

நாகர்கோவில்: ஓணம் பண்டிகை காலத்தில் பூக்கள் விலை அதிகமாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டம் தோவாளையில் உள்ள பூமார்க்கெட்டில் கடந்த ஓண சீசனில் மல்லி மற்றும் பிச்சிப்பூ ஒரு கிலோ 1200 ரூபாய்க்கு விற்பனை ஆனது. ஆனால் கடந்த 15 நாட்களாக பெய்த சாரல் மழையால் அதிக அளவில் பூக்கள் உற்பத்தி ஆகி மார்க்கெட்டுக்கு வழக்கத்தை விட அதிக பூக்கள் வந்தது. இதனால் நேற்று மல்லி மற்றும் பிச்சிப்பூ 200 முதல் 250 ரூபாய் வரை விற்பனை ஆனது. இதுபோல கிரேந்தி, ரோஜா, சம்பங்கி போன்ற பூக்களின் விலையும் வீழ்ச்சி அடைந்தது. இதனால் வியாபாரிகளும், பொது மக்களும் அதிர்ச்சி அடைந்தனர். ஆனால் பூ உற்பத்தியாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஓணம் பண்டிகையையொட்டி குமரி</u> மாவட்டம் <u>தோவாளையில் 100 டன் பூக்கள் விற்பனை</u>**




கன்னியாகுமரி: ஓணம் பண்டிகையையொட்டி குமரி மாவட்டம் தோவாளையில் 100 டன் பூக்கள் விற்பனையானது. ரூ.2 கோடி மதிப்புள்ள பூக்கள் விற்பனை என தோவாளை மலர்சந்தை வியாபாரிகள் தகவல் தெரிவித்தனர். ஓணம் பண்டிகை பூக்கள் விற்பனையில் கேரள வியாபாரிகளும் பங்கேற்றதால் விழா களை கட்டியது.

## காவிரி டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 24,666 கனஅடியாக அதிகரிப்பு



மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 24,666 கனஅடியாக அதிகரித்துள்ளது. கர்நாடாகா அணைகளில் இருந்து வெளியேறும் நீரின் அளவு அதிகரித்ததே இதற்கு காரணம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. கர்நாடாகா அணைகளில் வெளியேற்றப்படும் உபரி நீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருப்பதால் நீரின் அளவு 24,666 கனஅடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துவருவதால் அணையின் நீர்மட்டம் சரிவிலிருந்து மீண்டு 103.33 அடியாக உயர்ந்துள்ளது. அணையிலிருந்து பாசனத்திற்கு வினாடிக்கு 20,835 கனஅடி வீதம் நீர் திறக்கப்பட்டுள்ளது. நீர் இருப்பு 69.22 டிஎம்சி ஆக உள்ளது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் காவிரி டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## **கோவை ஏல மையத்தில் தேயிலைக்கு கூடுதல் விலை**



கோவை: கோவை தேயிலை ஏல மையத்தில் நேற்று நடந்த ஏலத்தில் ரூ.2.12 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனையாகியுள்ளது. கோவை தேயிலை ஏல மையத்தில், நேற்று நடந்த ஏலத்தில் தேயிலைத்தூள் உள்ளூர் ரகம்(டஸ்ட்) 2.62 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 2.05 லட்சம் கிலோ தூளை வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரியாக ஒரு கிலோ ரூ.72.40 என்ற அளவிற்கு ஏலம் போனது. மொத்தம் ரூ.1.49 கோடிக்கு வியாபாரம் நடந்தது. ஏற்றுமதி ரகம் (லீப்) 1.55 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 90 ஆயிரம் கிலோ தூளை வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். இதற்கு சராசரி விற்பனை விலை ரூ.69.73 பைசா கிடைத்தது. மொத்தம் ரூ.63 லட்சத்திற்கு வர்த்தகம் நடந்தது. கடந்த வார விலையோடு ஒப்பிடும்போது உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.3.69 அதிகரித்துள்ளது. ஏற்றுமதி ரகம் ரூ.2.51 அதிகரித்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் இந்த வாரம் ரூ.2.12 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரத்தை காட்டிலும் ரூ.7 லட்சம் அதிகமாகும் என்று ஏல மைய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**<u>பண்டிகை காலங்களில் வெங்காயம் விலை உயராது மத்திய அமைச்சர் உறுதி</u>**




புதுடெல்லி: பண்டிகை காலங்களில் வெங்காயம் விலை உயராமல் மத்திய அரசு பார்த்துக் கொள்ளும் என்று மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் ராதாமோகன்சிங் தெரிவித்தார். இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில், டெல்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் மத்திய அமைச்சர் ராதாமோகன் சிங் பங்கேற்று பேசுகையில், கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் ஒரு கிலோ

வெங்காயம் ரூ.90 முதல் ரூ.100 வரையில் அதிகரித்து விற்றது. இதனால் அப்போது இருந்த அரசுக்கு அச்சத்தை உண்டாக்கியதை டெல்லியிலுள்ளவர்கள் அறிவார்கள். ஆனால், வெங்காயம் விலை தற்போது ரூ.25 முதல் 30 வரையில் தான் விற்கிறது. இந்நிலையில், எதிர்வரும் பண்டிகை காலங்களில் வெங்காயத்தின் விலை உயராமல் இருக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. விலை உயர்வை மத்திய அரசு அனுமதிக்காது' என்றார்.

**<u>இங்கிலாந்தில் பல்வேறு வடிவில் உருளை கிழங்கு: விவசாயிகள் அசத்தல்</u>**




லைசெஸ்டர்ஷியர்: இங்கிலாந்தில் பல்வேறு வடிவங்களில் உருளைக் கிழங்குகளை விவசாயிகள் உருவாக்கி உள்ளனர். அவற்றை விற்பனைக்கு கொண்டு வந்த போது, பொதுமக்கள் வியப்புடன் பார்த்தனர்.இங்கிலாந்தில் சப்போக் மாநிலத்தில் சவுத்வேல்ட் பகுதியை சேர்ந்தவர் பிராங்க் பாரெட். காய்கறி விவசாயி. இவர் சாதாரணமாக இல்லாமல் சற்று வித்தியாசமாக விதவிதமான வடிவில் காய்கறிகளை உருவாக்குவதில் ஆர்வம் கொண்டவர். இதுதொடர்பான ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு வருகிறார். தற்போது பிராங்க் தனது காய்கறி பண்ணையில் தக்காளி பயிரிட்டு உள்ளார். கலப்பின தக்காளிகளை ஒருபுறமும், சாதாரண தக்காளிகளை மற்றொரு புறமும் பயிரிட்டார். பின்னர், இரண்டையும் ஒருங்கிணைத்து புதுவித தக்காளி இனத்தை உருவாக்கினார். அந்த தக்காளியின் உருவம் அடர் சிவப்பு நிறத்தில் மனித சிறுநீரகங்கள் போல் காட்சியளித்தன. இவற்றை நேற்று முன்தினம் மார்க்கெட்டில் பிராங்க் விற்பனைக்கு கொண்டு வந்தார். இந்த தக்காளியை பார்த்த மக்கள் வியப்படைந்தனர். இதேபோல், லைசெஸ்டர்ஷியர் நகரை சேர்ந்த கெவின் ஸ்டோக்சும் அவரது நண்பர்களும்

தங்களது பண்ணையில் விதவிதமான உருளைக்கிழங்கு விளைச்சலில் சாதனை படைத்துள்ளனர்.கடந்த 30 ஆண்டுகளாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, புதுவித உருளைக்கிழங்கை உருவாக்கி வருகின்றனர். தற்போது அவர்களது பண்ணையில் பெண்ணின் மார்பகத்தை போல் உருவாக்கி உள்ளனர். இவை சந்தையில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. அதன் உருவத்தை கண்டு பெண்கள் சிரித்தனர். ஆண்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றதாக கெவின் தெரிவித்தார்.

## வேளாண் அலுவலர் பணிக்கு பதிவு மூப்பு பட்டியல் வெளியீடு

வேலூர், : வேலூரில் உள்ள உதவி வேளாண் அலுவலர் காலிப்பணியிடங்கள் நிரப்பும் பணி நடக்கிறது. இதற்கான பட்டியல் தயார் செய்யப்பட்டு வேலைவாய்ப்பு அலுவலக தகவல் பலகையில் வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கலெக்டர் நந்தகோபால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் மூலம் உதவி வேளாண் அலுவலர் காலிப்பணியிடங்கள் நிரப்பிட, 2 ஆண்டு வேளாண் பட்டய படிப்பு கல்வித்தகுதி உள்ள மாணவர்களின் பட்டியல் கேட்கப்பட்டது. இதனடிப்படையில் இரண் டாண்டு வேளாண் பட்டயபடிப்பு முடித்தவர்கள் பட்டியல் தயார் செய்யப்பட்டு உத்தேச பதிவுமூப்பு வேலைவாய்ப்பு அலுவலக தகவல் பலகையில் பார்வைக்குவைக்கப் பட்டுள்ளது. தகுதியான பதிவுதாரர்கள் இதை சரிபார்த்து கொள்ளலாம்.

## வாணியம்பாடியில் டிஆர்ஓ தொடங்கி வைத்தார் ரூ 15லட்சம் மதிப்பில் பட்டுநூற்பு இயந்திரம்

வாணியம்பாடி, : வாணியம்பாடி இசுலாமியாக்கல்லு�ரியில் இந்திய அரசின் மத்திய பட்டுவாரியம் ஆராய்ச்சி விரிவாக்க மையத்தின் சார்பில் மல்பரி சாகுபடி வறட்சி மேலாண்மை மற்றும் வெண்பட்டு உற்பத்தி அறிவொளி விழா நடந்தது. டிஆர்ஓ மணிவண்ணன் தலைமை வகித்தார். திருப்பத்தூர் ஆராய்ச்சி விரிவாக்க மைய விஞ்ஞானி கோபிநாத் வரவேற்றார். சேலம் மண்டல பட்டு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி சிக்கன்னா கருத்துரை ஆற்றினார். சேலம் மண்டல பட்டு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் எஸ்.ராஜ்குமார், ஜே.ரவிக்குமார் ஆகியோர் வெப்ப சீதோஷ்ன நிலையில் வெண்பட்டு வளர்ப்பு மேலாண்மை மற்றும் மல்பரி சாகுபடி வறட்சி மேலாண்மை குறித்து பேசினார்கள். இதனையடுத்து

பெருமாள்பேட்டையில் இயங்கி வரும் அரசு பட்டுவளர்ச்சி துறை அலுவலகத்தில் வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் மணிவண்ணன் ரூ.15 லட்சம் மதிப்பிலான பலமுனை பட்டுநூல் தயாரிப்பு இயந்திரத்தின் செயல்பாட்டை தொடங்கி வைத்தார்.வாணியம்பாடி பட்டுவளர்ச்சித்துறை உதவி இயக்குனர் கோபால் நன்றி கூறினார்.

## ரூ.5.38 கோடியில் 3 புதிய தடுப்பணை

கோவை, : கோவை மாவட்டத்தில் 5.38 கோடி ரூபாய் செலவில் ஆனைமடுவு, குமுட்டிபட்டி, பெரிய பள்ளத்தில் புதிய தடுப்பணைகள் கட்டப்படும். கோவை மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப் பாட்டில் நொய்யல் ஆற்றில் 50 தடுப்பணைகளும், சங்கனூர், பவானி ஆற்று ஆதாரத்தில் 56 தடுப்பணைகளும், ஆற்று நீர் ஆதாரம் இல்லாத இடங்களில் 150க்கும் மேற்பட்ட தடுப்பணைகளும் கட்டப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் மட்ட உயர்விற்காக புதிய தடுப்பணைகள் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோவை போளுவாம்பட்டி வன எல்லையில் ஆனைமடுவு என்ற இடத்தில் 3 ஏக்கர் பரப்பில் புதிய தடுப்பணை கட்ட கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் திட்டமிடப்பட்டது. ஆனால் பொதுப்பணித்துறை நிர்வாகம் இந்த திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை. ஆலாந்துறை, தொண்டாமுத்தூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள், ஆனைமடுவு தடுப்பணை கட்டினால், இடப்பெயர்ச்சி மற்றும் வலசை பாதையில் செல்லும் யானை உள்ளிட்ட வன விலங்குகளின் நீர் தேவை பூர்த்தியாகும். வனப்பகுதியில் இருந்து வரும் காட்டாற்று வெள்ளம் தடுக்கப்படும். ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான விவசாய பயிர்கள் காட்டாற்று வெள்ளத்தில் நாசம் நிலை தவிர்க்கப்படும் என கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த திட்டத்திற்காக வனத்துறை வசம் இருந்து நிலம் பெறுவதிலும் தாமதம் ஏற்பட்டு வந்தது. தற்போது இந்த பிரச்னைக்கு சுமூக தீர்வு ஏற்பட்டதை தொடர்ந்து 93 லட்ச ரூபாய் செலவில் புதிய தடுப்பணை கட்ட நிதி ஒதுக்கப்பட்டது. வரும் நவம்பர் மாதம் தடுப்பணை துவக்கப்படும் வாய்ப்புள்ளது. இதேபோல் மதுக்கரை திருமலையம்பாளையம் அருகேயுள்ள கருஞ்சாமி கவுண்டன்பாளையத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து வரும் காட்டாற்று வெள்ளத்தை தடுத்து நீரை சேமிக்கும் வகையில்

குமுட்டிபட்டியில் 79 லட்ச ரூபாய் செலவில் புதிய தடுப்பணை கட்ட நிதி ஒதுக்கப்பட்டது. இந்த தடுப்பணையில் இந்த பகுதியில் சுமார் 5 கி.மீ தூரத்திற்கு நிலத்தடி நீர் மட்டம் உயரும். மழை காலங்களில் இங்கே நீரை தேக்க பள்ளம், தடுப்பணை இல்லாததால் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு வந்தது. தடுப்பணை கட்டினால் இந்த பகுதியில் விவசாய பயிர் உற்பத்தி அதிகரிக்கும், நிலத்தடி நீர் மட்டம் உயரும். மேட்டுப்பாளையம் காலம்பாளையத்தில் பெரியபள்ளம் என்ற இடத்தில் 66 லட்ச ரூபாய் செலவில் புதிய தடுப்பணை கட்டப்படவுள்ளது. 15 ஆண்டுகளாக இந்த பள்ளத்தில் தடுப்பணை கட்ட அந்த பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். கோவை மாவட்டத்தில் நீண்ட காலம் கிடப்பில் இருந்த தடுப்பணை திட்டங்கள் விரைவில் துவக்கப்படும் வாய்ப்பு உருவாகியுள்ளது. இது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**வாழையில் உயிர் உரங்கள் இடுவதை அதிகரிக்க வேண்டும் கிராம கருத்தரங்கில் ஆராய்ச்சி மைய இயக்குனர் தகவல்**

திருச்சி,: வாழை விவசாயிகள் உயிர் உரங்கள் இடுவதை அதிகரித்திட வேண்டும் என கிராம கருத்தரங்கில் ஆராய்ச்சி மைய இயக்குனர் தகவல் தெரிவித்தார். திருச்சி மாவட்டம் அந்தநல்லூர் ஒன்றியம் கோப்பில் கிராம கருத்தரங்கு நேற்று நடந்தது. வாழை ஆராய்ச்சி மைய இயக்குநர் முஸ்தபா தலைமை வகித்து பேசுகையில், வாழை விவசாயிகள் உயிர் உரங்கள் இடுவதை அதிகரி¢த்திட வேண்டும். வாழை விவசாயிகள் ஒன்றிணைந்து விவசாய உற்பத்தியாளர் கம் பெனியை உருவாக்கி அதன் மூலம் தங்கள் வருவாயை பெருக்கிக் கொள்ள வேண்டும். மேலும் மைய த்தின் சார்பில் மொந்தன் வாழை ரகத்தில் சபா என்ற ரகத்தை விரைவில் வெளியிட உள்ளோம் என்றார். சிறுகமணி வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் அசோகன் பேசுகையில், நெல் சாகுபடியில் பூச்சி மருந்து பயன்பாட்டை தேவைக்கேற்ப சரியான அளவில் பயன்படுத்த வேண்டும். தற்போது பயன்பாட்டில் உள்ள ஆந்திரா பொன்னி நெல் ரகத்திற்கு மாற்றாக நோய் தாக்குபிடிக்கும் திறன் கூடிய ஆடுதுறை49 ரகத்தை விவசாயிகள் நடை முறைப்படுத்த வேண்டும் என்றார். விஞ்ஞானிகள் செல்வராஜன், ரவி, முனைவர்

வெங்கடகுமார், முன்னோடி விவசாயி மாரிமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அந்தநல்லூர் ஒன்றியம் கோப்பு கிராமத்தில் கிராம மக்களின் வாழ்வாதார சூழ்நிலைகளையும், முக்கிய விவசாய சாகுபடி பயிர்களான வாழை, நெல், மல்லிகை போன்றவற்றின் தொழில்நுட்பம் மற்றும் சாகுபடியில் உள்ள பிரச்சினைகளையும் குறித்து பயிற்சி விஞ்ஞானிகள் விரிவாக ஆராய்ந்தனர். கடந்த 2 வாரம் நடந்த இந்த ஆய்வுகளின் முடிவுகளை கிராம மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு தீர்வளிக்கும் வண்ணம் தேசிய வாழை ஆராய்ச்சி மையம், சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தைச் சார்ந்த விஞ்ஞானிகள் கலந்து கொண்டு விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

## தரமான விதை உற்பத்தி பயிற்சி

மன்னார்குடி, : கோட் டூரில் நடந்த தரமான விதை உற்பத்தி பயிற்சியில் 75 விவசாயிகள் பயிற்சி பெற்றனர். திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே உள்ள கோட்டூரில் தரமான விதை உற்பத்தி பயிற்சி வகுப்பு நடைபெ ற்றது. ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் ஜீவானந்தம் தலைமை வகித்து பயிற்சியை தொடங்கி வைத்தார். கோட்டூர் வட்டார வேளாண்மை அலுவலர் முகமது தாரிக், ஊராட்சி தலைவர் குழந்தையம்மாள் முன்னிலை வகித்தனர். கோட்டூர் ஒன்றிய ஆணையர்கள் வெங்கடேசன், ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு விதை சான்று அலுவலர் சாமி நாதன் தரமான விதைகளை பராமரிப்பது குறித்து விளக்கமளித்தார். கோட்டூர் வட்டாரத்தை சேர்ந்த 75க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். துணை அலுவலர் சூரியநாராயணன் நன்றி கூறினார்.

## விவசாய கருத்தரங்கம்

திருத்துறைப்பூண்டி, : திருத்துறைப்பூண்டியில் விவசாயிகளுக்கான கருத்தரங்கம் நடைபெற்றது. திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் விவசாயிகளுக்கு நாமினி கோல்டு கருத்தரங்கம் நடைபெற்றது. நாமினி கோல்டு தொழில்நுட்ப மேலாளர் புதுடெல்லி புஷ்பேந்திரா தலைமை வகித்தார். அக்ரோ சீனிவாசன்

வரவேற்றார். திருச்சி பிஐ சின்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மண்டல மேலாளர் கண்ணன், அபிவிருத்தி மேலாளர் குணா ளன், கள மேலாளர் நந்தகுமார், விற்பனை அலுவ லர் கஜேந்திரன் ஆகியோர் விவசாயிகளுக்கு நாமினி கோல்டு களைக்கொல்லி மருந்து பயன்படுத்துவது குறித்து விளக்கம் அளித்தனர். கருத்தரங்கில் கட்டி மேடு நெல் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் அப்துல்ரஹ்மான், ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலு வலர் கணேசன், விவசாயி வரம்பியம் ஆனந்தன் உள் ளிட்ட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**<u>பட்டுநூல் உற்பத்தியில் இந்தியாவிற்கு மூன்றாமிடம் கருத்தரங்கில் தகவல்</u>**

திண்டுக்கல், : பட்டுநூல் உற்பத்தியில் உலகளவில் இந்தியா 3வது இடத்திலும், இந்திய அள வில் தமிழகம் முதலிடத்தி லும் உள்ளது என்று கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. வெண்டுபட்டு உற்பத்திக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் திண்டுக்கல்லில் நடைபெற்றது. பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் சச்சிதானந்தம் வரவேற்றார். கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்து பேசுகை யில், பட்டுப்புழுவிற்கு தேவையான மல்பெரி பயிரிட மண்வளம் முக்கியம். இதற்காக மண் பரிசோ தனை செய்து கொள்வது அவசியம். மேலும் புழுவின் தன் மையை பொறுத்தே நூலின் தன்மை இருக்கும். எனவே புழுவை குழந்தை போல பாவித்து நன்கு கவனித்து வளர்க்க வேண்டும் என்றார். மத்திய பட்டுவாரிய மண்டல பட்டு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி சிக்கண்ணா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கர்நாடகாவை சேர்ந்த இவர் தமிழில் சில வார்த்தைகளே பேசினார். தொடர்ந்து பேச சிரமப்பட்டதுடன் கன்னடம் கலந்து ஆங்கிலத்தில் திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார். இதனால் விவசாயிகள், இவர் கூறிய பல விபரங்களை தெரிந்து கொள்ள முடியாமல் தவித்தனர். தொடர்ந்து மதுரை மண்டல பட்டுவளர்ச்சி துறை துணை இயக்குநர் ராஜன், ஆராய்ச்சி விரிவாக்க மைய விஞ்ஞானி சமுத்திரவேலு, விஞ்ஞானி புனிதவள்ளி ஆகியோர் திட்டங்கள், பட்டுப்புழு வளர்ப்பு குறித்து விளக்கி பேசினர். திண்டுக்கல் உதவி இயக்குநர் சச்சிதானந்தம் கூறுகையில், பட்டுநூல் தயாரிப்பில் முதலிடத்தில் சீனாவும், மூன்றாவது இடத்தில் இந்தியாவும் உள்ளது. இந்தியாவைப் பொறுத்தளவில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. தமிழகத்தில் 34 ஆயிரத்து 793 ஏக்கர் பரப்பளவில்

21 ஆயிரத்து 415 விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பட்டுநூல் தேவை அதிகம் உள்ளது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்வதைக் குறைக்க, இங்கு உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நூறு சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம், ஏகக்கருக்கு ரூ.3 ஆயிரம் மானியத்தில் திட்டங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்றார். சமயநல்லூர் மத்திய பட்டுவாரிய ஆராய்ச்சி விரிவாக்க மைய விஞ்ஞானி சிவசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

<u>**விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்பு பயிற்சி**</u>

ஆரணி, : ஆரணி ஒன்றிய வேளாண்மை துறை சார்பில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முதன்மை திட்டம் 2014-15 ஆண்டுக்கான பண்ணை பள்ளி நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்ப பயிற்சி ஆரணி அடுத்த சேவூர் கிராமத்தில் நேற்று நடந்தது. இதில் திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஜெயசந்திரன் கலந்து கொண்டு பேசியதாவது: நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பத்தில் நெல் சாகுபடி செய்தால் விவசாயிகளுக்கு, நாற்றங்கால் செலவு, நடவு செலவு குறையும். களை கட்டுப்பாடு அதிகரிக்கும். இதனால் தற்போதுள்ள சூழ்நிலையில் விவசாய வேலையாட்களை குறைத்து தங்களிடம் உள்ள நிலத்தின் நீர் ஆதாரத்தை பெருக்கி, நேரடி நெல் விதைப்பு முறையை பயன்படுத்தி அதிக பயன் பெறலாம். இவ்வாறு அவர் பேசினார். அதைத் தொடர்ந்து தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட துணை இயக்குனர் செல்வராஜ், சாகுபடி மற்றும் செலவு விவரங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார்.

<u>**மாவட்ட திமுக செயலாளர் வலியுறுத்தல் விவசாயிகள் நெல் சாகுபடி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்**</u>

திருப்பூர், : விவசாயிகள் நெல் சாகுபடி நல்ல முறையில் செய்திட மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட திமுக செயலாளர் மு.பெ.சாமிநாதன் வலியுறுத்தியுள் ளார். திருப்பூர் மாவட்ட திமுக செயலாளர் மு.பெ.சாமிநாதன் கூறியிருப்பதாவது: திருப்பூர் மாவட்ட விவசாயிகள்

பருவமழையை நம்பி விவசாயம் செய்து வருகின்றனர். ஆனால், தற்போது பருவமழை சரியா ன பருவத்திற்கு பெய்வதில்லை. ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலி ருந்து கீழ்பவானி வாய்க்கால் மூலம் திருப்பூர் மாவட்டத்தில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பயனடைந்து வருகிறது. இவற்றில், இப்பகுதி மக்கள் கடலை மற்றும் எள் ஆகியவற்றை குறுகிய கால பயிர்களாகவும், நெல், வாழை, கரும்பு, மஞ்சள் ஆகியவற்றை நீண்ட கால பயிர்களாகவும் பயிரிடுகின்றனர். இந்நிலையில், ஆகஸ்ட் 15ம் தேதி முதல் நஞ்சை பயிர் சாகுபடிக்கான 2,300 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால், இந்த தண்ணீர் கடைகோடியான நத்தக்காடையூர், முத்தூர், மங்களப்பட்டி ஆகிய பகுதிகளுக்கு நெல் நாற்று நடுவதற்கு வந்து சேரவில்லை. மேலும் இந்த தண்ணீர் நஞ்சை சாகுபடிக்கு என அரசு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நஞ்சை சாகுபடி செய்ய நெல் நாற்று விடும் பணி தற்சமயம் துவங்க முடியாத சூழ்நிலை யில், ஆகஸ்ட் 15ம் தேதி முதல் டிசம்பர் 15ம் தேதி வரை 120 நாட்களில் நெல் பயிருக்கு தேவையான தண்ணீர் கிடைக்குமா? என்ற சந்தேகம் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறை அதிகாரிகள் கடைகோடி வரை ஒரே சீரான தேவையான நீர் நிர்வாகம் செய்யாமல் மெத்தன போக்கில் செயல்படுகின்றனர். இதன் கார ணமாக விவசாயிகள் மனக்கவலை அடைந்துள்ளனர். எனவே, சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகம், விவசாயிகளின் அச்சத்தை போக்கி, நெல் சாகுபடி நல்ல முறையில் செய்திட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், கடைகோடி பாசன விவசாயிகளை ஒன்று திரட்டி போராட்டம் நடத்துவதை தவிர வேறு வழியில்லை. இவ்வாறு மு.பெ.சாமிநாதன் கூறியுள்ளார்.

## <u>தென்னை மரங்களை அழிக்கும் வண்டுகளை ஒழிக்க வழி முறை</u>

உடுமலை, : தென்னை, பாக்கு மரங்களை அழிக்கும் வண்டுகளை ஒழிக்கும் வழி முறைகளை வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார். இதுகுறித்து உடுமலை வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் டாக்டர் இளங்கோவன்

விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: தென்னை, பாக்கு மரங்களை சிவப்பு கூண் வண்டு, காண்டாமிருக வண்டு போன்றவை தாக்கி அழித்து வருகின்றன. இவற்றை இனக்கவர்ச்சிப் பொறிகள் உதவியால் எளிதில் அழிக்கலாம். `லூர்`எனப்படும் பொன்வண்டுகளின் உடலில் இருந்து வெளிவரும் ஒருவித ஹார்மோன் செயற்கை முறையில் தயாரிக்கப்பட்டு குப்பிகளில் தரப்படுகிறது. அதை வாங்கி இனக்கவர்ச்சிப் பொறியில் வைக்க வேண்டும். அந்த ஹார்மோன் 3 மாதம் வரை காற்றில் கற்பூரம் போல கரைந்து ஒருவித வாசனையை வெளியிடும். அந்த வாசனையில் கவரப்படும் வண்டுகள் தானாக வந்து பொறியில் இருந்து வெளிவரும் வாசனையை நுகர்ந்து, பின்னர் வைக்கப்பட்டுள்ள பக்கெட்டில் உள்ள விஷத்தால் சாகும். இதன் மூலம் தென்னை, பாக்கு மரங்கள் காப்பாற்றப்பட்டு கூடுதல் மகசூல் பெறலாம். பொதுவாக இளங்கன்றுகள் சாகுபடி செய்தவர்கள் முதல் உயரமான கன்றுகள் வைத்தவர்கள் வரை மரத்துக்கு பரிந்துரைபடி உரம் இடாமல் இருந்தாலோ, நீர் பாய்ச்சாமல் இருந்தாலோ மகசூல் குறையும். அந்த இடத்தில் கூட இத்தகையை வண்டுகள் 30 முதல் 80 சதவீதம் வரை மரத்தை தாக்கி கடும் சேதத்தை விளைவிக்கின்றன. எனவே இனக்கவர்ச்சிப் பொறியை விளக்குப் பொறியுடன் சேர்த்து நிரந்தரமாக வைத்து தென்னை, பாக்கு மரங்களை பாதுகாக்கலாம். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி ஒன்றியம் சாந்தப்பாடி கால்நடை மருந்தகம் சார்பில் உப்புக்கரை கிராமத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. சாந்தப்பாடி ஊராட்சி தலைவர் குப்புசாமி முகாமை துவக்கி வைத்தார். சாந்தப்பாடி கால்நடை மருந்தக உதவி மருத்துவர் கோபால் தலைமையில் கால்நடை ஆய்வாலர்கள், உதவியாளர் உள்ளிட்ட கால்நடை மருத்துவ குழுவினரால் 105 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

## <u>பயிர்களுக்கு உயிர் உரமிட்டு அதிக மகசூல் பெறுங்கள்தோட்டக்கலை உதவி இயக்குநர்வேண்டுகோள்</u>

தோகைமலை : விவசாயிகள் உரச்செலவினை குறைக்க உயிர் உரங்களை அதிக அளவில் பயன்படுத்துமாறு தோகைமலை தோட்டக்கலை உதவி இயக்குநர்

ராஜேந்திரன் தெரிவித்தார். தோகைமலை ஒன்றிய பகுதியில் கனிசமான பருவ மழை பெய்து வருவதாலும், காவிரிப்பகுதியில் விவசாய பயன்பாட்டிற்கு தண்ணீர் திறந்திருப்பதாலும் விவசாயிகள் பல்வேறு விதமான பயிர் சாகுபடிகளை செய்ய துவங்கியுள்ளனர். இந்த விவசாயிகள் அதிக மகசூல் பெற செயற்கை உரங்களை தொட ர்ந்து உபயோகிப்பதால் செடிகள் மண்ணிலிருந்து உயிர்ச்சத்துகளை தேவையான அளவு உறிஞ்ச முடிவதில்லை. இது மட்டுமின்றி சுற்றுப்புற சூழ்நிலையும் மாசுபடுகிறது. எனவே இயற்கை உரங்களை பயன்படுத்துவதற்கான அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. உயிர் உரம்: காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு கிடைக்கும் வகையில் மாற்றி தரும் நுண்ணுயிர்களை உரமாக பயன்படுத்துவதால் உயிர்உரம் எனப்படுகிறது. அசோஸ்பைரில்லம்: அசோஸ்பைரில்லம் என்னும் பாக்டீரியா நுண்ணுயிர் செடிகளின் வேர்ப்பகுதியுடன் ஒட்டிக் கொண்டு வளரும் தன்மையுள்ளது. வேர்களைச் சுற்றி இவை வாழ்வதால் இவற்றால் நிலைப்படுத்தப்படும் தழைச்சத்து சுலபமாக பயிருக்கு கிடைக்கிறது. அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தினை காய்கறிகள், பழமரங்கள், மலர்கள், கரும்பு பருத்தி, நெல் மற்றும் சிறு தானியங்கள் போன்ற பயிர்களுக்கு பயன்படுத்தலாம். பாஸ்போபாக்டீரியா: பாஸ்போபாக்டீரியா உயிர் உரம் மண்ணில் கரையாத மணிச்சத்தினை கரைத்து பயிர்களுக்கு கிடைக்கும் வகையில் மாற்றி தருகிறது. மேலும் தாவரங்களின் வேர்கள் செழித்து வளரவும். பயிர்களின் இனப்பெருக்கத்திற்கும் தரமான தானிய மகசூலுக்கும் மணிச்சத்து மிகவும் இன்றியமையாதது. அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தாலாம். பயன்படுத்தும் முறை: உயிர் உரங்களை விதை யுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். நாற்றுக்களை உயிர் உர கரைசலில் நனைத்து நடவு செய்யலாம். நடவு வயலில் அல்லது விதைப்பு வயலில் நடவிற்கு முன்பு அல்லது விதைப்பதற்கு முன்பு தொழுஉரத்துடன் கலந்து வயலில் இடவேண்டும். ரசாயன உரங்களு டன் கலந்து இடக்கூடாது. உயிர் உரங்களின் பயன்கள்: உயிர் உரங்களை பயன்படுத்துவதால் மண் வளம் காக்கப்படுகிறது. தொடர்ந்து பயிர்களுக்கு சத்துக்களை உற்பத்தி செய்து கொடுக்கும். உரச்செலவு குறைகிறது. பயிர்களின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. சில உயிர் உரங்கள் பயிர் வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்து பயிரின் வளர்ச்சியை அதிகரிக்கின்றது. சுற்றுப்புறசூழல் பாதுகாக்கப்படுகிறது. மகசூல் அதிகம் கிடைக்கிறது. எனவே விவசாயிகள் உயிர் உரங்களை பயன்படுத்தி பயனடைய வேண்டும் இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

**<u>கரூர் மாவட்டத்தில் உழவுப்பணிக்கு வேளாண் கருவிகள் வாடகைக்கு தயார்வேளாண் பொறியியல் துறை தகவல்</u>**

கரூர், : உழவுப் பணிக்கு வேளாண் கருவிகள் வாடகை அடிப்படையில் வழங்கப்படுகிறது. கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 652.2 மிமீ ஆகும். கோடை பருவத்தில் பெய்ய வேண்டிய சராசரி மழை யான 109.5மிமீ க்கு 111 மிமீ மழை கிடைக்கப் பெற்றுள் ளது. மற்றபடி இந்தாண்டு இயல்பு மழை அளவு குறை ந்து 70 சதவீதம் அளவுக்கே மழைப்பொழிவு பெறப்பட்டுள்ளது. கோடை மழை மட்டும் சராசரியைவிட அதிகமாக கிடைத்தது. இதனைப் பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்தனர். இங்கு மழைப்பொழியா விட்டாலும், கர்நாடக அணைகளில் இருந்து உபரிநீர் மேட்டூர் அணைக்கு வந்துகொண்டிருக்கின்றன. மேட்டூர் நீர்மட்டம் கணிசமாக உயர்வதால் காவிரியில் நீர்வரத்து இருக்கிறது. இதனால் கரூர் மாவட்ட த்தில் கரூர், கிருஷ்ணராயபுர ம், குளித்தலை வட்டாரப்பகுதிகளில் காவிரி பாசன வி வசாயிகள் வேளாண் பணிக ளை மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில் உழவுப்பணிக்கு வேளாண்மை பொறியியல் துறை, தொடக்க கூட்டுறவு கடன் சங்கத்தில் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்காக தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது. பொறி யியல் துறையில் உழுவை இயந்திரம் வாடகையாக மணி க்கு ரூ.390, மண் தள்ளும் இயந்திரம் மணிக்கு ரூ.950 ம், வசூலிக்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் வாடகைத்தொகையை முன்கூட்டியே செலுத்தி பெயர்பதிவு செய்துகொள்ளலாம் என வேளாண் பொறியியல் துறையினர் தெரிவித்துள்ளனர். இரண்டாம் பசுமைப்புரட்சி திட்டத்தில் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் கரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டன. நடப்பு பருவத்திற்கு தேவைப்படும், நெல்விதைகள், சிறுதானிய விதைகள், பயறுவகை விதைகள், எண்ணைவித்து விதைகள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளது. மானிய விலையில் பெற்று விவசாயிகள் பயனடையலாம் என வேளாண் துறை அறிவித்துள்ளது. மழை நீரை சேமிக்க பண்ணைக்குட்டைகள் அமைக்கும் திட்டத்தில் இதுவரை மாவட்டத்தில் 388 பண்ணைக்குட்டைகள் இலவசமாக விவசாயிகளுக்கு அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. இதில் மழைநீர்

தேங்குவதால் விவ சாய தோட்ட கிணறுகளி நீர்மட்டம் உயரும். இதனை அமைக்காத விவசாயிகள், தங்களது பெயரை வேளாண்மைத்துறை களப்பணியாளரிடம் பதிவு செய்து பயனடையலாம். ஆழ்குழாய் கிணற்றில் இருந்து நீரை இரைப்பதற்கு 5எச்பி திறன்கொண்ட ஏசி நீர்மூழ்கி பம்புகள் பொறியியல் துறை மூலம் அமைத்துக் கொடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது. சோலார்பம்பு, நீர்மூழ்கி பம்புகள் அமைக்க ஆகும் செலவு ரூ.4லட்சம். இவ ற்றில் 80சதவீதம் மானியம் போக விவசாயியின் பங்குதொகையாக ரூ.80ஆயிரம் செலுத்த வேண்டும். சோலார் பம்புகள் மானியத்தில் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பெயர், முக வரி, சிட்டா, அடங்கல், நிலவரைபடம், அடையாள அட்டை நகலுடன் விண்ணப்பத்தை வேளாண்மை பொறியியல் துறை அல்லது வேளாண்மைத்துறையில் வழங்கலாம். முன்னுரிமை அடிப்படையில் சோலார் பம்பு அமைக்க பணிஆணை உதவி செயற்பொறியாளரால் வழங்கப்படும். தேவைப் படும் விவசாயிகள் தங்கள் வட்டார கள பணியாளர் களை அணுகி பெற்றுபயனடையலாம் என வேளாண் பொறியியல்துறை தெரிவித்துள்ளது.

**<u>கரூர் மாவட்டத்தில் 1.87 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்படும்கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் தகவல்</u>**

பரமத்தி, : கரூர் மாவட்டத்தில் 1.87 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப் படும் என கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் தகவல் தெரிவித்துள்ளார். க.பரமத்தி ஒன்றியம் சின்னதாராபுரம் ஊராட்சி புளியம்பட்டியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நே ற்று நடைபெற்றது. கால் நடை மருத்துவர் மோகன் ராஜ் வரவேற்றார். ஆவின் உதவி பொது மேலாளர்கள் துரையரசன், வசந்தகுமார், விரிவாக்க அலுவலர் ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் குழந்தைசாமி முகாமை தொடங்கி வைத்து பேசியதாவது: கோமாரிநோய் என்பது கால்நடைகளை தாக்கி பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் ஒரு கொடிய தொற்றுநோய். இதனை கிராமப் புறங்களில் கால்க ட்டு, வாய்ச்சப்பை என்பர். இந்த நோய் விரைவில் பரவக்கூடிவை. நோயுற்ற கால்நடைகளில் கடும் காய்ச்சல்,

வாய், நாக்கு, மடி, காம்பு, குளம்புகளுக்கு இடையே கொப்பளங்கள் புண்கள் காணப்படும். இந்நோயுற்ற கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம், உபயோகப்படுத்திய தண்ணீர், தீவனத்தொட்டிகள், தீவனம், காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பரவுகின்றன. இந்நோய் தாக்குதலால் கறவை கால்நடைகளின் பால் உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் சினைப்பிடிப்பது தடைபடும். பாதிக்கப்பட்ட மாடுகளின் பாலை இளம்கன்றுகள் குடிப்பதன் மூலம் குட்டிகள் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடும். கடந்த வருடம் இந்நோய் தாக்குதலினால் பல மாவட்டங்களில் கால்நடைகள் வெகுவாக பாதிக்கப்பட்டன. கரூர் மாவட்டத்தில் தடுப்பூசிகள் போடப்பட்டு பராமரிக்கப்பட்டன. எனவே கால்நடையை தாக்கி அதிக பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் கோமாரி நோயை தடுக்க தற்போது 7வது சுற்றுக்காக மாவட்டத்தில் 1.87லட்சம் தடுப்பூசிகள் வந்துள்ளன. இதனை கடந்த 1ந்தேதி முதல் வருகிற 21ம்தேதி வரை வழங்க வேண்டுமென மாவட்ட கலெக்டர் ஜெயந்தி உத்தரவிட்டதுடன், அவரே கடந்த 1ந்தேதி முகாமை தொடங்கி வைத்தார். 4ந்தேதி வரை 41ஆயிரத்து 500 கால்நடைகளுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 1லட்சத்து 45 ஆயிரத்து 500 தடுப்பூசிகள் மாடுகளுக்கு வழங்க கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் அனைத்து கிராமங்களிலும் தடுப்பூசி போடும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. எனவே பண்ணையாளர்கள் அனைவரும் தங்கள் அனைத்து கால்நடை களையும் தடுப்பூசி அளி க்கும் இடத்திற்கு கொண்டுசென்று, கோமாரி நோய் தடுப்பூசியை முன்னெச்சரிக்கையாக போட்டு கால்நடைகளை பாதுகாத்திட வேண்டும். ஏற்கனவே தடுப்பூசிகள் போட்டிருந்தாலும் மீண்டும் மாடுகளுக்கு தடுப்பூசி போட்டுக்கொ ள்வது அவசியம் என்றார். முகாமில் கால்நடை மருத்துவர் மோகன்ராஜ், கால்நடை ஆய்வாளர்கள் சக்திவேல், ஜானகி, உதவியாளர் மரியஉபகாரம் ஆகிய மருத்துவ குழுவினரால் 300மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியும், சினைப்பரிசோதனை மற்றும் சினைதரிக்காத கால்நடைகளுக்கு சிறப்பு சிகிச்சைகளும் இலவசமாக வழங்கினர்.

## நெற்பயிரில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

உத்தமபாளையம், : உத்தமபாளையம் பகுதியில், நெற்பயிரில் புகையான் நோய் தாக்கும் அறிகுறி இருந்தால், அதனை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து, விவசாயிகளுக்கு வேளாண்துறையினர் விளக்கம் அளித்துள்ளனர். உத்தம பாளையம் பகுதியில், முல்லைப்பெரியாறு பாசனத்தின் மூலம், ராயப்பன்பட்டி, கோகிலாபுரம், ஆனைமலையன்பட்டி, ராமசாமிநாயக்கன்பட்டி, உத்தமபாளையம், உ.அம்மாபட்டி, அம்பாசமுத்திரம் ஆகிய ஊர்களில் 900 எக்டேர் நிலப்பரப்பில், குறுவை சாகுபடிக்காக நெல் நடப்பட்டுள்ளது. இப்பகுதியில், தற்போது குளிர்ச்சியான தட்பவெப்பநிலை நிலவுகிறது. வானம் எப்போதும் மேக மூட்டத்துடன் காணப்படுகிறது. இதனால், நெல்பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்பட்டு, புகையான் நோய் தாக்கும் அபாயம் உள்ளது. எனவே, அவ்வாறு புகையான் நோய் அறிகுறிகள் நெற்பயிரில் தென்பட்டால், அதனை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண்துறையினர் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்துள்ளனர். இதுகுறித்து அவர்களது அறிக்கை: நெற்பயிரில், சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் அறிகுறியாக, பயிர்கள் தீய்ந்தது, மஞ்சள்(அல்லது) பழுப்பு நிறத்தில் காணப்படும். முதிர்ச்சி அடைந்த பயிர்கள், காய்ந்து வட்டவடிவ திட்டுகளாக நிலத்தில் சாயும். இதனை கட்டுப்படுத்த வயல்வெளியில் தேங்கியுள்ள தண்ணீரை முழுமையாக வடித்துவிடவேண்டும். நோய்தாக்குதல் இருந்தால், தழைச்சத்து உரமான யூரியாவை தவிர்க்கவேண்டும். விளக்குபொறி அமைத்து புகையானை கவர்ந்து அழிக்கலாம். வயலில் நன்றாக தண்ணீர்வடிந்த பிறகு புப்ரோபெசின் மருந்தினை ஏக்கருக்கு 200 மி.லி., அளவில் கலந்து பயிரின் அடிப்பகுதியில் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். இதேபோல, செயற்கை பைரிதிராய்டு மருந்துகளை தெளிப்பதை தவிர்க்கவேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

**திருவில்லிபுத்தூரிலிருந்து வெளி மாநிலங்களுக்கு செல்லும் நாட்டு தேங்காய்கள்**

திருவில்லிபுத்தூர், : திருவில்லிபுத்தூர் அருகே உள்ள மம்சாபுரத்தில் இரு ந்து வெளி மாநிலங்களுக்கு நாட்டு தேங்காய்கள் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. திருவில்லிபுத்தூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களில் அதிகளவு தென்னை பயிரிட்டு விவசாயம் செய்து வருகின்றனர். குறிப்பாக மம்சாபுரம், வத்திராயிருப்பு, உள்ளிட்ட கிராமங்களில் அதிகளவு தென்னையிலிருந்து பறிக்கப்படும் நாட்டு தேங்காய்கள் திருவில்லிபுத்தூர் மட்டுமின்றி வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. குறிப்பாக மம்சாபுரத்திலிருந்து கொல்கத்தா, இந்தூர் உட்பட பல்வேறு மாநிலங்களுக்கு லாரி உட்பட பல்வேறு வாகனங்களில் அதிகளவு அனுப்பப்பட்டு வருகிறது. இதற்காக வெளி மாநில தேங்காய் வியாபாரிகள் கொள்முதல் செய்ய மம்சா புரத்திறக்கு வந்து வாங்கி செல்கின்றனர். மேலும் இந்த பகுதியை சோந்த விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் மட்டும் இன்றி பிற விசாயிகளிடம் இருந்தும் தேங்காயகளை வாங்கி அதனை தரம் பிரித்து தங்களுக்கு சொந்தமான இடங்களில் குவித்து வைத்து தேங்காயின் தரத்தை பொறுத்து விலைய நிர்ணயம் செய்து வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். இதற்காக தேங்காயை சைஸ் வாரியாக தரம் பிரிக்கும் பணியில் தினமும் ஏராளமான யணியாளர்கள் ஈடுபட்டு உள்ளனர். இதுகுறித்து மம்சாபுரத்தை சேர்ந்த தேங்காய் மொத்த வியாபாரி ஒருவர் கூறுகை யில், 'இந்த பகுதி யில் உள்ள மண் வளத்தின் அடிப்படையில் இந்த பகுதியில் பறிக்கும் தேங்காய்கள் அனைத்தும் மிகுந்த ருசி மிகுந்ததாகவும், சுவையாகவும் இருக்கும். மேலும் இங்கு விளையும் நாட்டு தேங்காய்கள் நீண்ட நாள் தாக்கு பிடிக்கக்கூடியவை. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் வட மாநில வியாபாரி கள் இங்குள்ள தேங்காய்களை விரும்பி வாங்கி செல்கின்றனர்' என்றார்.

**செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 20 டன் வெங்காயம் ரூ. 1.67 லட்சத்துக்கு ஏலம்**

பெரம்பலூர், : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 20 மெட்ரிக் டன் வெங்காயம் ரூ. 1.67 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுக்கா, செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 4ம் தேதி வியாழக்கிழமையன்று திறந்த முறை ஏலம் நடைபெற்றது. இது குறித்து

பெரம்பலூர் மாவட்டக் கலெக்டர் தரேஸ் அகமது தெரிவித்திருப்பதாவது: 4ம் தேதியன்று செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் திறந்தமுறை ஏலம் நடைபெற்றது. இதில் இருர், ஆலத்தூர், லாடபுரம், சத்திரமனை, செட்டிக்குளம், நாட் டார்மங்கலம், களரம்பட்டி, பாடாலூர், எளம்பலூர், கூத்தூர், நமையூர், சிறு வயலூர், புது நடுவலூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 51 விவசாயிகள் தங்களது சின்ன வெங் காயத்தினை திறந்த முறை ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர். செட்டிகுளம், கோபிசெட்டிப்பாளையம், நாட்டார் மங்கலம், செங்காட்டுப்பட்டி, மற்றும் அம்மாபாளையம் ஆகியப் பகுதிகளிலிருந்து வியாபாரிகள் மற்றும் விதை வெங்காய விவசாயிகள் 20 நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விவசாயிகள் கொண்டு வந்திருந்த 322 மூட்டைகள், அதாவது 20,138 கிலோ சின்ன வெங்காயத்தை வியாபாரிகள் மற்றும் விதை வெங்காய விவசாயிகள் ஏலத்தில் எடுத்தனர். இந்த ஏலத்தில் பழைய பட்டறை வெங்காயம் அதிகப்பட்சமாக ரூ. 11.50க்கும், புதிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 25க்கும், சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ. 8க்கும் விலை கிடைத்தது. இதன் மூலம் ரூ. 1 லட்சத்து 67ஆயிரத்து 313க்கு சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்பட்டது. செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகளில் திறந்த முறை ஏலம் நடத்தப்படுகிறது. விவசாயிகள் தங்களது வெங்காயத்தை வருகிற 9ம் தேதியன்று (செவ்வாய் கிழமை) கொண்டுவந்து விற்பனை செய்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

**45 ஆயிரம் ஏக்கர் முதல்போக பாசனத்திற்கு வைகை அணையில் தண்ணீர் திறப்பு**

**தேனி, மதுரை கலெக்டர்கள் மதகுகளை இயக்கி வைத்தனர்**



திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் உள்ள 45 ஆயிரம் ஏக்கர் நிலங்களின் முதல்போக பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. தேனி, மதுரை மாவட்ட கலெக்டர்கள் மதகுகளை இயக்கி வைத்தனர். பாசனத்திற்கு தண்ணீர் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே 71 அடி உயரம் கொண்ட வைகை அணை அமைந்து உள்ளது. இந்த அணையில் இருந்து திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் பெரியாறு பாசன பகுதிகளில் உள்ள நிலங்களில் முதல்போக சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விட முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி தேனி மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி, மதுரை மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியன் ஆகியோர் அணையில் இருந்து பாசனத்திற்காக மதகுகளை இயக்கி தண்ணீரை திறந்து வைத்தனர். அணையில் உள்ள சிறிய கண் மதகுகளில் 3 மதகுகள் வழியாக தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஒரு மதகுக்கு தலா 300 கன அடி வீதம், வினாடிக்கு

மொத்தம் 900 கன அடி தண்ணீர் பாசனத்திற்காக திறந்து விடப்பட்டது. 45 ஆயிரம் ஏக்கர் திறந்து விடப்பட்டதும் ஆர்ப்பரித்து சென்ற தண்ணீரில் இரு மாவட்ட கலெக்டர்கள் மற்றும் அதிகாரிகள் மலர் தூவினர். இந்த தண்ணீர் மூலம் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகாவில் 1,793 ஏக்கர் நிலங்கள், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு தாலுகாவில் 29 ஆயிரத்து 501 ஏக்கர், வாடிப்பட்டி தாலுகாவில் 13 ஆயிரத்து 747 ஏக்கர் என மொத்தம் 45 ஆயிரத்து 41 ஏக்கர் நிலங்கள் முதல்போக பாசன வசதி பெற உள்ளன. இதுகுறித்து இருமாவட்ட கலெக்டர்களும் கூறுகையில், 'வைகை அணையில் இருந்து முதல்–அமைச்சர் உத்தரவுப்படி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. முதற்கட்டமாக வினாடிக்கு 900 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு உள்ள போதிலும், நீர்வரத்து மற்றும் நீர்இருப்பை பொறுத்து தண்ணீர் திறக்கும் அளவில் மாற்றம் ஏற்படலாம். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி விவசாய பணிகளை மேற்கொள்ள வேண்டும்' என்றனர். நீர்மட்டம் இந்த நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை பெரியாறு வைகை வடிநிலகோட்ட செயற்பொறியாளர் முத்துப்பாண்டி, வைகை அணை உபகோட்ட உதவி செயற்பொறியாளர் மொக்கமாயன், பெரியகுளம் ஆர்.டி.ஓ. ராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குனர் திலகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நாகரத்தினம், ஜீவரத்தினம் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். வைகை அணையின் நீர்மட்டம் நேற்று 52.10 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 317 கன அடியாக இருந்தது. அணையில் மொத்தம் 2 ஆயிரத்து 278 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

<u>**வடமதுரை அருகே விவசாயிகளுக்கு துவரை சாகுபடி விளக்கம்**</u>



ண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகேயுள்ள மொட்டனம்பட்டியில், துவரை சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள் தொடர்பாக விவசாயிகளுக்கு சிறப்பு முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் வேளாண்மை உதவி இயக்குனர் ராணி, அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு நவீன துவரை சாகுபடி முறைகள் குறித்து விளக்கி கூறினர். முகாமில் உதவி இயக்குனர் ராணி பேசுகையில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் துவரை கேஆர்ஜி–7 விதை ரகம் பெறப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த ரகம் 120 முதல் 135 நாட்களில் அறுவடையாகி விடும். துவரை சாகுபடி செய்வதற்கு புரட்டாசி பட்டம் மிகவும் உகந்தது. துவரையை ஊடுபயிராகவோ, தனி பயிராகவே, வரப்பு பயிராகவோ சாகுபடி செய்யலாம். இதற்கு துவரை விதைகளை குழித்தட்டு, பாலித்தீன் பைகளில் இட்டு நாற்றாங்கால் அமைக்க வேண்டும். நாற்று விட்டு 15 நாட்கள் முதல் 25 நாட்களுக்குள் 5–3 அடி இடைவெளியில் அதை நடவு செய்ய வேண்டும். இதற்காக உரம், களைக்கொல்லி, பூச்சி மருந்து உள்ளிட்ட இடுபொருட் கள் மானியத்தில் வழங்கப்படும், என்றார். இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## <u>பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 71 அடியை எட்டுகிறது கரையோர பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இன்று வெள்ள அபாய எச்சரிக்கை</u>



குமரி மாவட்டத்தில் பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 71 அடியை எட்டுகிறது. இதனால் கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இன்று (சனிக்கிழமை) வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுகிறது. மழை ஓய்ந்தது குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக சாரல்மழை பெய்து வந்தது. இந்தநிலையில் கடந்த 2 நாட்களாக மழை இல்லை. எனினும் அணைகளின் நீர்மட்டமும் படிப்படியாக

உயர்ந்து வருகிறது. குளங்களும் நிரம்பி வருகின்றன. மழை ஓய்ந்ததையொட்டி அணைகளுக்கு வரும் தண்ணீரின் வரத்து குறைந்து கொண்டிருக்கிறது. பேச்சிப்பாறை அணைக்கு நேற்று வினாடிக்கு 456 கனஅடியும், பெருஞ்சாணிக்கு 620 கன அடியும், சிற்றார்–1 அணைக்கு 52 அடியும், சிற்றார்–2 அணைக்கு 72 கன அடியும் தண்ணீர் வந்தது.

<u>இன்றுஎச்சரிக்கைவிடப்படும்</u>

பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 27.30 அடியாக இருந்தது. நேற்று மாலை 28 அடியாக உயர்ந்தது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் நேற்று மாலை 70.90 அடியாக உயர்ந்தது. இன்று (சனிக்கிழமை) காலைக்குள் 71 அடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இன்று இந்த அணை தண்ணீர் பாய்ந்தோடும் ஆற்றங்கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். நாகர்கோவிலுக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணையில் நேற்று முன்தினம் 17.70 அடி தண்ணீர் இருந்தது. அது நேற்று 18.40 அடியாக உயர்ந்து. மாம்பழத்துறையாறு அணையின் கொள்ளளவு 54 அடி. இந்த அணை கடந்த சில நாட்களுக்கு முன்பே நிரம்பிவிட்டது. இதனால் இந்த அணைக்கு வரும் தண்ணீர் உபரிநீராக வெளியேற்றம் செய்யப்படுகிறது. நேற்றைய நிலவரப்படி சுமார் 25 கனஅடி தண்ணீர் உபரியாக வெளியேற்றப்படுகிறது.

<u>திற்பரப்புஅருவி</u>

கடந்த சில நாட்களுக்கு முன்பு மழை பெய்யத் தொடங்கியதில் இருந்து நேற்று வரை 16 நாட்களில் பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 18½ அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 27 அடியும் உயர்ந்துள்ளது. தொடர் மழையின் காரணமாக குமரி மாவட்டத்தில் 36 வீடுகள் வரை சேதம் அடைந்துள்ளன. குமரி குற்றாலம் என அழைக்கப்படும் திற்பரப்பு அருவியில் அதிக அளவில் தண்ணீர் கொட்டுகிறது. ஓணம் பண்டிகையை முன்னிட்டு கேரளா மற்றும் குமரி மாவட்டத்தின் பல இடங்களில் இருந்து ஏராளமான சுற்றுலாப்பயணிகள் திற்பரப்பு அருவிக்கு வந்து ஆனந்தமாக குளித்தனர்.

**<u>தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியை விவசாயிகள் திடீர் முற்றுகை</u>**

திண்டிவனம் அருகே நொளம்பூர் தொடக்க வேளாண்மை கூட்டு றவு கடன் சங்க வங்கி யினை விவசாயிகள் முற்றுகையிட்டு போராட் டம் நடத்தினர். விவசாயிகள் போராட்டம் திண்டிவனம் அருகே நொளம்பூரில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வங்கி உள்ளது. இந்த வங்கி முன்பு நேற்று 50-க்கும் மேற்பட்ட

விவசாயிகள் ஒன்று திரண்டனர். பின்னர் அவர்கள் திடீரென, இந்த கூட்டுறவு கடன் சங்க வங்கியில் முறைகேடு நடப்ப தாக கூறி வங்கியை முற்றுகை யிட்டு போராட்டத்தில் ஈடுபட் டனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், தங்களுக்கு தர வேண்டிய கரும்பு பயிர் கடன் தொகையினை கூட்டுறவு வங்கி நிர்வாகத்தினர் சரியாக வழங்காமல் பெரும் முறை கேடுகள் செய்து வருகின்றனர். மேலும் கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு வழங்குவதற் காக இருக்கும் உர மூட்டை களை சிலர் பணம் ஏதும் கொடுக்காமல் வங்கியில் இருந்து அவ்வப்போது எடுத்துச் சென்று வருகின் றனர். இதனால் ஏழை, எளிய விவசாயிகளான நாங்கள் பெரிய அளவில் பாதிக்கப் பட்டு வருகின்றோம். இது குறித்து கேட்டால் கூட்டுறவு வங்கி நிர்வாகத்தினர் தங் களுக்கு முறையான பதிலை அளிப்பதில்லை. இதன் காரணமாக என்ன செய்வதென்று தெரியாமல் நாங்கள் தவித்து வருகின்றோம். குறிப்பாக பயிர் கடனை நம்பி நாங்கள் ஏற்கனவே அதிக பரப்பளவில் கரும்பு பயிர் செய்து இருந்தோம். தற்போது அவைகள் நன்கு வளர்ந்து வரும் நேரத்தில் , கரும்புக்கு தேவையான உரங்களை எங்களால் போட முடிய வில்லை. இதன் காரணமாக கரும்பு பயிர்கள் வீணாகும் சூழ்நிலை உரு வாகியுள்ளதால் நடப்பாண் டில் எங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது என்று கூறினர். இவர்களிடம் அதிகாரிகள் யாரும் பேச்சுவார்த்தை நடத்த வராததால் விவசாயிகள் அனைவரும் அங்கிருந்து மிகுந்த வேதனையுடன் சென்றனர். விவசாயிகளின் இந்த திடீர் முற்றுகை போராட்டத்தினால் நொளம் பூரில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.